தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 136/பேரூ/2022

நாள் 19.09.2022

திரு. சு. ரவிகுமார்
கயத்தார், தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கயத்தார் பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 21, இந்திரா நகர், கயத்தார் என்ற முகவரியைச் சேர்ந்த திரு.சு. ரவிகுமார் என்பவரின் 29.08.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.08.2022ல் பெறப்பட்டு, 136/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 21, இந்திரா நகர், கயத்தார் என்ற முகவரியைச் சேர்ந்த திரு.சு. ரவிகுமார் தமது 29.08.2022 நாளிட்ட புகார் மனுவில் தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் பேரூராட்சியில் சுகாதார பணியாளர்களாக பணிபுரிந்துவரும் திரு. கு. பிச்சையா மற்றும் திரு. வே. சேகர் ஆகியோர் தங்களது பணியினை சரிவர செய்யாமல் அதிகார துஷ்பிரயோகம் செய்யும் காரியங்களில் அடிக்கடி ஈடுபடுகின்றனர் என்றும், நிலபுரோக்கர் வேலைகளை செய்துவருகின்றனர் என்றும், அவர்கள் மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டுவருவது குறித்து பத்திரப்பதிவு அலுவலக ஆவணங்களையும், பணியில் இருந்துகொண்டு பத்திரப்பதிவு செய்ததற்கு பேரூராட்சியின் பணி நாட்குறிப்புகளையும் தனது புகாருக்கான ஆதாரங்களாக இணைத்தனுப்பிவைத்துள்ளார். எனவே, பேரூராட்சியில் பணியில் இருந்துகொண்டு பத்திரப்பதிவு பணிகளில் ஈடுபட்டுவரும் மேற்கண்ட இருவர் மீதும் விசாரணை மேற்கொண்டு, அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மேலும், தனது சுய தேவைக்காக அரசுப் பதவியை துஷ்பிரயோகம் செய்யும் அரசு ஊழியர்கள் மீது பெருந்தண்டனைகள்

வழங்குவதற்கு விதி எண்.17(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் என்ற விதியின் பகுதி நகலினையும், மேற்கண்ட துப்புரவு பணியாளர்கள் அரசுப்பணியை துஷ்பிரயோகம் செய்துள்ளது குறித்து, பேரூராட்சியின் பணி நாட்குறிப்பினையும், பத்திரப்பதிவு செய்ததற்கு பத்திரப்பதிவு அலுவலக ஆவணங்களில் அவர்களது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கான ஆதார ஆவணங்களையும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 21.12.2021ல் கயத்தார் முதல்நிலை பேரூராட்சி பொது தகவல் அலுவலருக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு விவரங்கள், அந்நாட்களில் அவர்கள் பணிபுரிந்த பணி நேரங்களின் விவரம் மற்றும் என்னென்ன பணி செய்தார்கள் என்பனவற்றை அளிக்கக்கோரி அளித்துள்ள விண்ணப்ப நகலினையும் தனது புகார் மனுவுடன் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

2. கயத்தார் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறவுள்ள நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 02.09.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும், தொலைவழிச் செய்தி மூலமும் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் 06.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் பேரூராட்சியில் சுகாதார பணியாளர்களாக பணிபுரிந்துவரும் திரு. கு. பிச்சையா மற்றும் திரு. வே. சேகர் ஆகியோர் பேரூராட்சியில் தங்களது பணிகளை சரிவர செய்யாமல், பேரூராட்சி பணியில் இருந்துகொண்டு பிறர் சொத்தினை அபகரிக்க பத்திரப்பதிவு செய்வதும், நிலபுரோக்கர் வேலைகளையும் செய்தும், அதிகார துஷ்பிரயோகம் செய்துவருகின்றனர். உதாரணமாக திரு. கு. பிச்சைய்யா என்பவர் கடந்த 10.1.2020 வெள்ளிக்கிழமை மாலை சுமார் 4 மணிக்கு தனிநபர் ஒருவருக்கு பத்திரப்பதிவு வேலை செய்துள்ளார். மேற்கண்ட நாளில் சுகாதாரப்பணியாளர் திரு. பிச்சையா கயத்தார் பேரூராட்சியில் பணியாற்றிய விவரத்தை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரப்பட்டுள்ளபோதிலும் அவ்விவரத்தை பேரூராட்சியினர் அளிக்க மறுக்கின்றனர். இதிலிருந்து கயத்தார் பேரூராட்சி சுகாதார பணியாளர் திரு. பிச்சைய்யா பேரூராட்சிப் பணியை மேற்கொள்ளாமல் மற்ற வெளி வேலைகளை குறிப்பாக பத்திரப்பதிவு வேலைகளை செய்துவருகிறார் என்பது தெளிவாகிறது. எனவே, மேற்படி நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. கயத்தார் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ரா. பாலசுப்பிரமணியன் 6.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் பேரூராட்சியில் திரு. கு. பிச்சையா மற்றும் வே. சேகர் ஆகியோர் சுகாதார பணியாளர்களாக பணியாற்றிவருகின்றனர். மனுதாரருக்கும் மேற்கண்ட சுகாதார பணியாளர் இருவருக்கும் சொத்துப் பிரச்சனை மற்றும் சொந்தப் பிரச்சனை காரணமாகவும், காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் மனுதாரர் மேற்கண்ட புகார் மனுவினை அனுப்பியுள்ளார். எனினும், மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களான திரு. கு. பிச்சைய்யா மற்றும் திரு. வே. சேகர் ஆகியோரின் பேரூராட்சி பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும் எனவும், பேரூராட்சி பணியிலிருந்து தவறும் பட்சத்தில் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், கயத்தார் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் கயத்தார் பேரூராட்சியில் சுகாதாரப் பணியாளர்களாக பணிபுரிந்துவரும் திரு. கு. பிச்சையா மற்றும் திரு. வே. சேகர் ஆகியோர் மீது புகார் அளித்துள்ளார். எனினும், இவரால் அளிக்கப்பட்டுள்ள ஆதார ஆவணங்களில், அதாவது சார் பதிவாளர் அலுவலக பத்திரப்பதிவு ஆவணங்களில் திரு. கு. பிச்சையா என்பவரது பெயர் மட்டுமே இடம் பெற்றுள்ளது தெளிவாகிறது. திரு. வே. சேகர் என்பவர் மனுதாரரால் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டில் இடம்பெற்றுள்ளதற்கு எந்தவிதமான ஆதார ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.
- சுகாதாரப் பணியாளர் திரு. கு. பிச்சையா என்பவருக்கு ஆதாரமாக அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களும் பதிவுத் துறையினால் சான்றளிக்கப்பட்ட ஆவணங்களா என்ற சந்தேகத்தினை எழுப்புவதாக உள்ளது. பத்திரப்பதிவுத் துறையினால் சான்றளிக்கப்படாத நிலையில், மனுதாரர் அளித்துள்ள ஆதாரங்கள் போதுமான ஆதார ஆவணங்களாக கருதிட இயலாது. மேலும், கயத்தார் சார் பதிவாளர் அலுவலகத்தினால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் திரு. மா. காளிபாண்டி என்ற மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்களையே மனுதாரர் திரு. ரவிக்குமார் ஆதார ஆவணங்களாக இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.
- கயத்தார் பேரூராட்சியில் சுகாதார பணியாளர்களாக பணிபுரிந்துவரும் திரு. கு. பிச்சையா மற்றும் வே. சேகர் ஆகியோர் 1997 முதல் 2020 வரையிலான ஆண்டுகளில் பல்வேறு குறிப்பிட்ட தேதிகளில் பேரூராட்சியில் பணிபுரிந்த பணிநேர விவரங்கள் மற்றும் என்னென்ன பணிகளைச் செய்தார்கள் என்பதற்கான விவரங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் கயத்தார் பேரூராட்சி பொது தகவல் அலுவலரிடம் கோரியதாகவும், அவ்விவரங்களை பேரூராட்சியினர் அளிக்க மறுப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.
- சுகாதாரப் பணியாளர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கான நன்னடத்தை விதிகள் பொருந்தும் என்பதை அறிந்திருந்தும், வெவ்வேறான காலக்கட்டங்களில் திரு. கு. பிச்சையா என்பவர் பதிவுத் துறை ஆவணங்களில் சாட்சியொப்பம் இட்டுள்ளதாக அவரது பெயர் இடம்பெற்றுள்ளதால், இனிவரும் காலங்களில் இதுபோன்ற செயல்களில் சுகாதாரப் பணியாளர்கள் ஈடுபடுவதை தவிர்த்திடவும், சுகாதாரப் பணியாளர்களின் பணியினை அவ்வப்போது கண்காணித்து எச்சரித்திடவும் கயத்தார் பேரூராட்சி செயல் அலுவலர் கண்காணிப்பது கட்டாய கடமையென்பதை வலியுறுத்தவும் அவசியமாகிறது.
- துப்புரவுப் பணியாளர்களின் பணியை கண்காணிக்க வேண்டிய செயல் அலுவலர் இப்புகார் மனு தனிப்பட்ட பிரச்சனை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அளிக்கப்பட்டுள்ளது என வாக்குமூலம் அளித்துள்ளதும், அவர்களது பணிகள் யாவும் பேரூராட்சி நிர்வாகத்தினால் கண்காணிக்கப்படும் என்று இம்முறைமன்ற

நடுவத்திற்கு மனுதாரர் புகார் மனு அளித்துள்ளதற்குப் பின்னர் கூறியுள்ளதும் செயல் அலுவலரின் கண்காணிப்பில் உள்ள குறைபாடுகளை எடுத்துரைத்துள்ளது.

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் பேரூராட்சியில் சுகாதாரப் பணியாளர்களாக பணிபுரிந்துவரும் திரு. கு. பிச்சையா மற்றும் திரு. வே. சேகர் ஆகியோர் பேரூராட்சியில் சுகாதாரப் பணியில் இருந்துகொண்டே பத்திரப்பதிவு பணிகளில், அரசுப் பணியை துஷ்பிரயோகம் செய்து சுய லாபத்திற்காக ஈடுபட்டுவந்துள்ளதாக மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள புகார் ஆவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை. மேலும், சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் தனது பெயரில் அல்லாமல் பிரிதொரு நபரின் பெயரில் பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் முன்வைக்கப்பட்டுள்ளது என தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட ஆவணங்களின் உண்மைத் தன்மையை கண்டறிய கயத்தார் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. உண்மைத் தன்மையின் அடிப்படையில், சுகாதாரப்பணியாளர் தவறேதும் இழைத்திருப்பது உண்மையென கண்டறியப்பட்டால், திரு. கு. பிச்சையா, சுகாதாரப் பணியாளர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் கயத்தார் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது..

2022ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– X X X X X
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. சு. ரவிகுமார், த/பெ வே. சுடலை,
22/21, இந்திரா நகர், கயத்தார், தூத்துக்குடி மாவட்டம்–628 952.
செயல் அலுவலர், கயத்தார் பேரூராட்சி, கயத்தார், தூத்துக்குடி மாவட்டம்–628 952
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தூத்துக்குடி மண்டலம், தூத்துக்குடி
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி.
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

20/9/22
செயலாளர்
20.9.22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032